**த. நா.ச.பே. எண் : 011** **நாள் : 01.04.2015**

<u>தொடர்ச்சி – 3</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (1.4.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2015–2016ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை:–

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு
இப்படி மானியங்கள் தருவது குறித்தும்
உதவித் தொகைகள் அளிப்பது குறித்தும்
விலையில்லா பொருட்கள் வழங்குவது குறித்தும்
வாய் கிழிய பேசுபவர்கள்
இந்த அரசின் நிதிநிலை குறித்த
கவலையால் அப்படி பேசவில்லை .

அவர்களது கவலையெல்லாம்,
இப்படி மானியங்கள் வழங்குவதாலும்
கல்வி உதவித்தொகைகளை
அள்ளித் தருவதாலும்,
விலையில்லா அரிசி,
விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி
விலையில்லா மிதிவண்டி என்றும்,
தாலிக்குத் தங்கம் என்றும்,
அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட் என்றும்,
வகை வகையாய் திட்டங்கள் செயல்படுத்துவதாலும்,
மாண்புமிகு அம்மா அவர்கள்
மக்கள் இதயங்களில்

நீங்கா இடம் பெற்று விட்டார்களே,
மக்கள் மனதிலிருந்து
மாண்புமிகு அம்மா அவர்களை
இனி என்றுமே நீக்க வழியில்லையே,
என்பதுதான் அவர்களது கவலை !

உலை கொதிக்கும் இல்லங்களில்,
அன்னத்தின் வடிவிலே அம்மா தெரிகிறார்

பள்ளி மாணவச் செல்வங்கள்
விரிக்கும் புத்தத்திலும்,
அணியும் சீருடையிலும்,
மடிக்கும் கணினியிலும்,
உருண்டோடும் மிதிவண்டியிலும்,
சுமக்கும் புத்தகப் பையிலும்,
வண்ணப் பென்சில்களிலும்,
வடிவியல் பெட்டிகளிலும்,
உலக வரைபட புத்தகத்திலும்,
வெள்ளைத்தாளை வண்ணமாக்கும்
கிரையான்களிலும்,
இன்ன பிற கல்வி உபகரணங்களிலும்
அள்ளித்தரும் கல்வி உதவித் தொகையிலும்,
கலைமகளின் உருவாக
காவியத் தாயே ஜொலிக்கிறார்.

கட்டுத் துறையில் கட்டியிருக்கும்
ஆடும் மாடும் எழுப்பும்

அம்மா என்னும் குரலிலும்
அவர்தானே ஒலிக்கிறார்.

ஏழைப் பெண்களின் கழுத்திலே தவழும்
தங்கத் தாலியிலும்,
கொழு கொழு என குதித்தோடி வரும்
பிள்ளைகள் முகத்திலும்
மாண்புமிகு அம்மா அவர்கள் தானே தெரிகிறார்.

தஞ்சைக்கு ஓடிவரும் காவேரித் தண்ணீரிலும்,
முழு அளவை எட்டுகிற
முல்லைப் பெரியாறு நீரிலும்,
மாண்புமிகு அம்மா அவர்களின்
முகம் தானே தெரிகிறது.

என்.எல்.சி. நெய்வேலி நிலக்கரி பங்குகளிலும்,
அபகரிப்பிலிருந்து மீட்டுப் பெற்ற நிலங்களிலும்
எங்களைக் காக்கும் தெய்வமாய்
எங்கள் அம்மா தானே தெரிகிறார்.
இப்படி மக்கள் நோக்கும் இடங்களில் எல்லாம்
நீக்கமற அம்மா நிறைந்திருப்பதை
தாங்க முடியவில்லை அவர்களால்
மாண்புமிகு அம்மா அவர்கள்
ஏழரைக் கோடி தமிழர்களின் இதயங்களிலும்
நீங்கா இடம் பிடித்து
கொலுவீற்றிருப்பதை ஏற்றுக்கொள்ள
இயலவில்லை அவர்களது இதயங்களால்,

அதனால்தான்
இல்லாத ஊருக்கு பொல்லாத வழி சொல்லுவது போல்
இந்த அரசு
வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தருகிறதா ?
இலவசங்களுக்கு முக்கியத்துவம் தருகிறதா
என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள்
வலியச்சென்று உதவிகள்தருவது ஒன்றும்
வம்படியாய் ஆதரவு பெற்றிட அல்ல.

மக்களைத் தன் உயிரெனக் கருதி
உள்ளன்போடு உதவிகள் தருகிறார் அம்மா.

தமிழக மக்களும்
தங்கள் உயர்வுக்குக் காரணம் அம்மா அவர்களே
என்ற உண்மையை உணர்ந்து
அளவிலா அன்பை, பாசத்தை, நேசத்தை
மாண்புமிகு அம்மா அவர்கள்மீது செலுத்துகிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரேபியாவில் ஆறு இல்லை,
ஆமைக்கு பல் இல்லை,
அத்திமரத்தில் பூ இல்லை,

இனிப்பு அறியும் சக்தி பூனைக்கு இல்லை,
இலந்தை மரத்தில் பறவை கூடு கட்டுவதில்லை,

ஈசலுக்கு வயிறு இல்லை,
இந்தியாவில் எரிமலை இல்லை,
ஐஸ்லாந்தில் ரயில் இல்லை,
ஹவாய் தீவில் பாம்பு இல்லை,

கடலில் முதலைகள் வாழ்வது இல்லை,
உலகில் 26 நாடுகளில்
கடலோரக் கடற்கரையே இல்லை,

பல்லி தண்ணீர் குடிப்பது இல்லை,
ஒட்டகத்திற்கு நீந்தத் தெரிவதில்லை,

மலைப் பாம்புக்கு நஞ்சு இல்லை,
வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை,
குயில்கள் கூடுகட்டி வாழ்வதில்லை,
குளிர் காலத்தில் கூவுவதும் இல்லை,

பூடடான் நாட்டில் தியேட்டர் இல்லை,
மாசிடோனியாவுக்கு தேசியக் கொடி இல்லை,

பக்ரைன் தேசிய கீதத்தில் வார்த்தைகளே இல்லை,
ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை,
யமுனா நதி கடலில் கலப்பது இல்லை,

சிங்கப்பூரில் காகம் இல்லை,
கிவி பறவைக்கு இறக்கை இல்லை,

பூச்சி–புழுக்கள் தூங்குவது இல்லை,

உண்மையை மறைத்து
வம்புக்கு பேசும் அரசியல் கட்சிகளுக்கு
அரசியல் வாழ்க்கை இனி இல்லை

தங்கத் தாரகை எங்கள் அம்மாவை குறை சொல்ல
யாருக்கும் அருகதை இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் 110 விதியை பற்றியே இங்கு கேட்டுக் கொண்டே இருந்தார். அதற்குண்டான பதிலை தருகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–12 ஆம் ஆண்டு விதி எண் 110–ன் கீழ், 51 திட்டங்களை அறிவித்தார்கள். இதில் 51 திட்டங்களுக்கும் அரசாணைகள் வெளியிடப்பட்டு, 39 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.12 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

2012–13 ஆம் ஆண்டு, விதி எண் 110–ன் கீழ், 87 திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 83 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, 50 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 32 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அரசாணை வெளியிடப்பட்டும் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுத்த இயலவில்லை. மீதமுள்ள 4 திட்டங்கள் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளன.

2013–14 ஆம் ஆண்டு, விதி எண் 110–ன் கீழ், 292 திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 288 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, 132 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 156 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஒரு திட்டம் மத்திய அரசிடம்

நிலுவையில் உள்ளது. இதர 3 திட்டங்களை செயல்படுத்த ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது.

2014–15 ஆம் ஆண்டு, விதி எண் 110–ன் கீழ் 236 திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 209 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, 12 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 197 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 4 திட்டங்கள் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளன. மீதமுள்ள 23 திட்டங்களை செயல்படுத்த ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. நிறைவேற்றப்பட்ட திட்டங்களைப் பற்றி நான் கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன்.

பெரிய உள்கட்டமைப்புப் பணிகள் செயலாக்கத்தில் பல்வேறு நிலைகள் உள்ளன. நில எடுப்புப் பணியின் காரணமாக பாலம் மற்றும் சாலைப் பணிகளில் அதற்கான கால அளவு வழங்கப்பட வேண்டும். மேலும், நீதிமன்ற வழக்குகள் காரணமாகவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் போது சாலையின் தன்மை மற்றும் தல ஆய்வு ஆகியவற்றிற்கு உரிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். எனவே, திட்டம் அறிவிக்கப்பட்ட ஆண்டிலேயே முழு நிதியையும் ஒதுக்க இயலாது. இந்த நடைமுறையை திமுகவும் கடைபிடித்துள்ளது.

உதாரணத்திற்கு, 14,300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'சென்னை மெட்ரோ இரயில் திட்டம்' செயல்படுத்த 2007ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் 2011 ஆம் ஆண்டு வரை 1,143 கோடி ரூபாய் தான் ஒதுக்கீடு செய்து செலவு செய்யப்பட்டது. ஏன், 14,300 கோடி ரூபாயை 2007ஆம் ஆண்டிலேயே ஒதுக்கீடு செய்யவில்லை என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு.மு.க.ஸ்டாலின் பதில் தேடினால் தற்போது ஏன் திட்டங்களுக்கான முழுத் தொகைக்கும் நிதி ஒதுக்கம் செய்யவில்லை என்பதற்கு விடை கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் கூட, சிறப்பு பொதுவிநியோகத் திட்டம் பற்றி குறிப்பிட்டார். அவருக்கு நான் தெரிவிப்பது ஜனவரி மாதத்தில் 12,755 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 4,877 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும் மற்றும் 144 இலட்சம் லிட்டர் சமையல் எண்ணெயும் பொது விநியோகக் கடைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. பிப்ரவரி மாதத்தில் 9,373 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 5,805 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும், 138 இலட்சம் லிட்டர் சமையல் எண்ணெயும் வழங்கப்பட்டுள்ளது. சில கடைகளில் மட்டும் இருப்பு குறைந்திருக்கலாம். தற்காலிகமாக இருப்பு தீர்ந்திருந்தால் அது பற்றிய கோரிக்கைகள் உடனுக்குடன் தீர்த்து வைக்கப்படுகின்றன. அது சரிசெய்யப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கும் மாற்றுக் கருத்து இல்லை. இத்தகைய குறைபாடுகள் உறுதியாக சரிசெய்யப்படும். அதற்காக இந்தத் திட்டம் செயல்படவில்லை என்று சொல்லிவிட முடியாது. இத்திட்டம் சிறப்பாகத் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நாங்கள் கேட்பதெல்லாம் இத்தகைய மானியங்கள் வீண் செலவா? விவசாயிகளுக்கும் நெசவாளர்களுக்கும் வழங்கப்படும் கட்டணம் இல்லா மின்சாரம் வீண் செலவா? ஏழை, எளிய நடுத்தர மக்கள் வீட்டில் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு மானியம் வழங்குவது வீணானதா? டீசல் மானியம் தருவதால்தானே குறைந்த பேருந்துக் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. இது தேவையற்றதா? ஒருபுறம் போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று கூறுகிறார்கள். மின்சாரக் கட்டணம் உயர்த்தக் கூடாது என்கிறார்கள். ஆனால் அதே சமயம், இதனால் அந்த நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பீட்டை இதுபோல் மானியம் மூலம் அரசு வழங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அவ்வாறு ஒதுக்கினால் அதை வீண் செலவு என்று கூறுகின்றனர். எதைத்தான் இவர்கள் அரசிடம் எதிர்பார்க்கின்றனர் என்று புரியவில்லை.

இது தவிர, பல்வேறு திட்டங்களுக்கு நிதி உதவியாக 36,507 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. இதில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதி

11,798 கோடி ரூபாய் ஆகும். இந்தச் செலவினங்களை தேவையற்ற செலவினங்களாக கருதிவிட முடியுமா? மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு வழங்கப்படும் 5,248 கோடி ரூபாய் உதவித்தொகை வீண்செலவா? ஏழைகளுக்கு வழங்கப்படும் சூரிய மின்சக்தியோடு கூடிய பசுமை வீடுகள் கட்ட 1,260 கோடி, தேசிய சுகாதாரத் திட்டத்திற்கு 1,224 கோடி, திருமண உதவித் திட்டங்களுக்கு 693 கோடி, மகப்பேறு மருத்துவ உதவித் தொகைக்கு 668 கோடி, பெண்குழந்தை பாதுகாப்பு திட்டத்திற்கு 140 கோடி, நகர்ப்புர ஏழைகளுக்கு வீடுகள் கட்ட 289 கோடி, உயர்கல்வியில் இடைநிற்றலைக் குறைக்க 381 கோடி, மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்க 1,100 கோடி, நகர்ப்புர வறுமை ஒழிப்பிற்கு 357 கோடி, தூய்மை இந்தியா திட்டத்திற்கு 350 கோடி, கிராமப்புற வறுமை ஒழிப்பிற்கான புதுவாழ்வு திட்டத்திற்கு 255 கோடி, தூய்மை கிராமம் திட்டத்திற்கு 335 கோடி, திறன் மேம்பாடு திட்டத்திற்கு 150 கோடி போன்ற திட்டங்களும் இந்த ஒதுக்கீட்டில் அடங்கியுள்ளன. இவையெல்லாம் வீணான செலவுகளா? இத்திட்டங்கள் கைவிடப்பட வேண்டிய திட்டங்களா?

விலையில்லா மடிக்கணினி வழங்கப்படுவதால்தானே அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஏழை மாணவர்கள் கணினி அறிவைப் பெறுகின்றனர். அதனால்தானே இன்று இந்தியாவிலேயே தமிழ்நாடு கணினி அறிவில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. எனவே, இத்தகைய கேள்விகளை எழுப்புவோர் அந்த நிதி, எந்த எந்த தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை ஆய்வு செய்து அவற்றில் தேவையற்றவை என்று எதையாவது கருதுவார்களேயானால் அது பற்றி வெளிப்படையாக கருத்தை தெரிவிக்கலாம். அதை விடுத்து ஒட்டுமொத்தமாக இவ்வாறு ஒதுக்கப்படும் நிதி வீண் செலவு என்று கூறுவது ஏழை எளிய மக்களுக்கு இவர்கள் செய்யும் துரோகம் என்பதையே உறுதிப்படுத்தும்.

இங்கு மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி பேசும் போதுகூட பால் விலை பற்றியும் முதியோர் உதவித்தொகையை பற்றியும் குறிப்பிட்டார். இந்த பேரவையில் இவை பற்றி பல முறை விளக்கம் அளிக்கப்பட்டுவிட்டது. ஆனால் உறுப்பினர்களுக்கு இதுபற்றி பேசவில்லை என்றால் அவர்களுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை.

முதியோர் உதவித் தொகை வழங்க 2010-2011 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 1,208 கோடி ரூபாய் மட்டுமே. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றதும் மாதம் 500 ரூபாய் என வழங்கப்பட்டு வந்த முதியோர் உதவித் தொகையை மாதம் 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். இதனால் 2015-16ல் இதற்கான ஒதுக்கீடு 4,206 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகையை பொறுத்தவரை, வருமானம் ஈட்ட வழியில்லா வறிய நிலையில் உள்ளவர்களுக்கு அந்த உதவி வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கும்போது சில இடங்களில் தவறுகள் நேரலாம். கார், மாடி வீடு வைத்திருப்பவர்கள்கூட சில இடங்களில் முதியோர் உதவித்தொகை பெறும் நிலை சில நேரங்களில் நிகழ்கிறது. இறந்தவர்கள் பெயரில் கூட சிலர் தவறாக உதவித்தொகை பெறலாம். இவற்றை அவ்வப்போது கண்டறிந்து நீக்கினால்தான் தகுதியான புதிய நபர்களுக்கு வழங்கமுடியும். அப்படி கண்டறியும்போது ஒரு சில தகுதியான நபர்கள் நீக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தால் உடனடியாக சரிசெய்யப்படும். இத்தகைய பணியை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூட செய்யலாம். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தகுதியான நபர்கள் எவருக்கும் முதியோர் உதவித்தொகையை மறுக்காது என்றும் அப்படி இருந்தால் எங்கள் கவனத்துக்கு கொண்டுவாருங்கள் அது உடனடியாக சரிசெய்யப்படும் என்றும் பலமுறை இந்த அவையில் தெளிவுபடுத்தப்பட்ட பின்பும் மீண்டும் மீண்டும் அதுபற்றி பேசவேண்டும் என்பதற்காவே பேசுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும்

இப்பிரச்சனைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தில் தகுதியான நபர்கள் சேர்க்கவேண்டி இருந்தாலோ, விடுபட்டிருந்தாலோ, தகுதியிருந்தும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தாலோ மாவட்ட நிர்வாகத்தை அணுகி தீர்வுகாண வேண்டும் என்றும், இப்பணியை முன்னுரிமை அளித்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அத்தகைய எளியோருக்கு என்றும் உதவிடும் அரசாக இருக்கும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோலத்தான் பால் விலையும். இந்த அவையில் பலமுறை இதுபற்றி தெளிவுபடுத்தியுள்ளோம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களே மிக விரிவான விளக்கமான பதிலை இங்கே அளித்திருக்கிறார்கள். ஆனால் அதை பற்றியே மீண்டும் மீண்டும் பேசப்படுகிறது. விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையை கோரும் பாலபாரதி விற்பனை விலையை ஏற்றவே கூடாது என்கிறார். விற்பனை விலையை ஏற்றாமல் கொள்முதல் விலையை ஏற்றுவது சாத்தியமா? இதனால் ஏழைகள் பாதிக்கப்படுவதாக கூறுகிறார்கள். இதில் ஏழைகள் பாதிக்கப்படவில்லை என்பதை அன்றே தெளிவுபடுத்தினேன்.

தமிழ்நாட்டில் மொத்த பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 187 இலட்சம் லிட்டர் ஆகும். இதில் ஆவின் கொள்முதல் அளவு 30 இலட்சம் லிட்டர் மட்டுமே. ஆவின் கொள்முதல் விலையை உயர்த்தாவிட்டால், ஆவின் நிறுவனம் பால் கொள்முதல் செய்ய முடியாத நிலைக்கு போய்விடும். இதனால், பால் கொள்முதல் என்பது தனியாரின் ஏகபோகமாக மாறிவிடும். ஆவின் இந்த அளவு கொள்முதல் செய்வதால்தான் ஒருபுறம் விவசாயிகளும் மறுபுறம் நுகர்வோரும் பயன்பெறுகின்றனர். ஆவின் நிறுவனம் கொள்முதல் செய்யும் பால் மூலம் நாள் ஒன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டர் சென்னையிலும், 9.91 இலட்சம் லிட்டர் பிறமாவட்டங்களிலும் விற்கப்படுகிறது. குறைந்த விலையில் பால் வாங்கி பயன்

பெறுபவர்கள் அட்டைதாரர்கள் மட்டுமே. இவ்வகையில் சென்னையில் 7 இலட்சம் அட்டைதாரர்களும், பிறமாவட்டங்களில் ஒரு இலட்சம் அட்டைதாரர்களும் உள்ளனர். இவர்கள்தான் ஆவின் குறைந்த விலையில் சமன்படுத்தப்பட்ட பாலை விற்பதன் மூலம் பயன் அடைபவர்கள். இதில் பெரும்பாலும் வசதியுள்ளவர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள்தான் அதிகம். இதில் ஏழைகள் 30 சதவீதம் கூட இல்லை. இதற்கு மானிய விலையில் விற்று ஆவின் நஷ்டப்பட வேண்டுமா? ஆவின் நிறுவனம் நலிவடைந்தால் யாருக்கு லாபம்? பிற 70 சதவீதம் பயனாளிகள் மானியம் பெறவேண்டிய நிலையில் இல்லாதபோதும் இதற்கு மானியம் வழங்கப்பட வேண்டும் என கூறுவது எந்த வகையில் நியாயம்?

இதுகுறித்து மேலும் ஒரு விளக்கத்தை தருகிறேன். ஆவின் மூலம் விற்கப்படும் சமன்படுத்தப்பட்ட பாலின்விலை லிட்டர் ஒன்றுக்கு 34 ரூபாய். இவ்வாறு சென்னையில் விற்கப்படும் சமன்படுத்தப்பட்ட பாலின் அளவு நாள் ஒன்றுக்கு 5.60 இலட்சம் லிட்டர். ஆனால், தனியார் மூலம் இதே பாலின் விற்பனை விலை லிட்டருக்கு 42 ரூபாயிலிருந்து 44 ரூபாய் வரை விற்கப்படுகிறது. அவர்கள் சென்னையில் விற்கும் பால் அளவு அனைத்து வகையும் உள்பட நாள் ஒன்றுக்கு 11.25 இலட்சம் லிட்டர். இந்நிலையில், பால்விலை நியாயமான அளவு கூட உயர்த்தாமல் ஆவின் எப்படி செயல்பட முடியும். இதை வைத்து எவ்வளவு காலம்தான் அரசியல் செய்வது? பால்விலை பற்றிய விளக்கம் இத்துடன் போதும் எனக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களும், இதன் உண்மை நிலையை உணர்ந்து செயல்பட கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி, சுகாதாரம் போன்ற சமூதாய நலத்திற்கான மேம்பாட்டுக்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என சிலர் விமர்சித்துள்ளனர். கல்வித் துறையைப் பொறுத்தவரை, 2010-11ம் ஆண்டில் மொத்த ஒதுக்கீடு 13,319.49 கோடி ரூபாய். ஆனால் 2015-16ம் ஆண்டில் கல்வித் துறைக்கான ஒதுக்கீடு

24,633.32 கோடி ரூபாய். இது மாநிலத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 13.67 சதவீதமாகும். அதே போல் சுகாதாரத் துறைக்கு 2010-11ல் ஒதுக்கப்பட்ட தொகை 4,395.31 கோடி ரூபாய். ஆனால் 2015-16ம் ஆண்டில் ஒதுக்கீடு 8,245.41 கோடி ரூபாய். மக்கள் நலத்துறைக்கு மொத்த ஒதுக்கீட்டில் 4.52 சதவீதம் என நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டுள்ளேன். இந்த அளவுக்கு ஒதுக்கீடு கல்விக்கும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கல்வித் துறையில் கட்டமைப்புகளை மேம்படுத்தியது, பல்வேறு புதிய முன்முயற்சிகளின் மூலம் கல்வி கற்கும் திறனை மேம்படுத்தியது, கல்வி உரிமை சட்டத்தின் கீழ் 1,36,593 நலிவடைந்த, வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் குழந்தைகளை கல்விக்கூடங்களில் சேர்த்தது, பள்ளிக்குச் செல்லாத 46,737 சிறுவர், சிறுமியரை பள்ளியில் சேர்த்தது என பல சிறப்பான சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செய்துள்ளது. பெண் கல்வியை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் மிகவும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயர்கல்வியில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்க ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் கல்வி உபகரணங்கள் அனைத்தையும் விலையில்லாமல் வழங்குதல், 11, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினி, பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி போன்ற எண்ணற்ற திட்டங்களின் மூலமாக, மாணவ மாணவியர் சேர்க்கை கூடியுள்ளதால் கல்வித் துறையில் ஒரு புதிய வரலாற்றை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு படைத்துள்ளது. இதன் விளைவாக, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களின் சேர்க்கை கணிசமாக உயர்ந்துள்ளது. அதன் புள்ளி விவரங்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல் சுகாதாரத் துறையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்தது, தற்போதுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேர தரம் உயர்த்தப்பட்ட சுகாதார மையங்களாக மாற்றியது, மாநகர மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றில் எண்ணற்ற கட்டமைப்பு மற்றும் உபகரண வசதிகளை மேம்படுத்தியதுடன், கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்களை பணியமர்த்தியது என மருத்துவமனைகளின் தரம் ஒரு உச்ச நிலையை எட்டியுள்ளது. பொதுமக்களுக்கான முதலமைச்சரின் மருத்துவக் காப்பீடு திட்டம், ஏழை எளிய மக்களுக்கு ஒரு பெரும் பாதுகாப்பை அளித்து வருகிறது. இவ்வகையில் கல்வி மற்றும் சுகாதாரத் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள் முனைப்புடன் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் பயனாக, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, இன்று தமிழ்நாடு, கல்வி, சுகாதார குறியீடுகளில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக உள்ளது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**